பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 7 | இதழ் 45 | 8 டிசம்பர் 1969 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

**மாசேதுங் சிந்தனை**

ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் விடுதலைக்கான தம் நம்பிக்கைகளை ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினதும் ''புத்திசாலித் தனத்தில்'' வைக்கக் கூடாது. தங்கள் ஐக்கியத்தைப் பலப்படுத்தித் தங்கள் போராட்டத்தில் விடாப்பிடியாக இருப்பதால் மட்டுமே அவர்கள் வெற்றியடைவர்.

# வீறிட்டெழும் தொழிலாளர் போராட்டம்

**தொழிலாளர்களின் போராட்டம் கடந்த சில வாரங்களில் உக்கிரமடைந்து முன்னேறுவதை கண்டுகொள்ளலாம், இப் போராட்டங்களுள் புகையிரதப் பகுதியை சேர்ந்த புகைவண்டி டிரைவர்கள், கார்ட் மார்கள் ஆகியோரின் வேலைநிறுத்தம் பொதுமக்களின் கவனத்தை கவர்ந்துள்ளதோடு புகையிரதப் போக்குவரத்துகளையும் ஸ்தம்பிக்கச் செய்துள்ளது. இந்த வேலைநிறுத்தத்தை தவிர வேறுபல வேலைநிறுத்தங்களும் நடைபெறுகின்றன. ஜிந்தொட்டையிலுள்ள ஒட்டுப்பலகை தொழிற்சாலையில் கடந்த ஐந்துவாரங்களாக வேலைநிறுத்தம் நடைபெறுவதோடு கிரில்லவெலையிலுள்ள எனுமேல் அலுமினிய தொழிற்சாலையிலும் கடந்த முப்பத்தொரு நாட்களாக வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. திவிதுர தோட்டத்திலுள்ள தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தோ - சிலோன் தோலுற்பத்தி தொழிற்சாலை, அக்மி அலுமினியம் கம்பெனி ஆகியவற்றில் கடமையாற்றும் தொழிலாளர்களினது வேலைநிறுத்தமும், மேபீல்ட் தோட்டத் தொழிலாளர்களது வேலைநிறுத்தமும் ஒருவாறு முடிவடைந்துள்ளது. துறைமுகத் தொழிலாளர்கள் டிசம்பர் பத்தாந்திகதி வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.**

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளதினால் தொழிலாளர்கள் வாழ்க்கை நிலையை சமாளிக்க முடியாமல் கஷ்டப்படுவதே பொதுவாக இவ் வேலை நிறுத்தங்களுக்கெல்லாம் காரணமாகும். இவ் வேலை நிறுத்தங்கள் யாவற்றிலும் ஹட்டன் பகுதியிலுள்ள மேபீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தமே மிக முக்கியமானதாகும். இது பல பாடங்களை தொழிலாள வர்க்கத்திற்கு கற்றுத் தந்துள்ளது.

1300க்கு மேற்பட்ட தோட்ட தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தினதும் (சி. டி. யு.எப்) இலங்கை தொழிலாளர் காங்கிரசினதும் கூட்டுத் தலைமையின் கீழ் நவம்பர் பதினோராந் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். வேறு பல கோரிக்கைகளோடு கலை பிடுங்கலுக்கு அளிக்கப்படும் சம்பளத்தில் வெட்டிய பங்கை மீண்டும் கொடுக்க வேண்டும், வேலை கொடுப்பதற்கு பிள்ளைகளை பதிவுசெய்ய வேண்டும் போன்ற பிரதான கோரிக்கைகளையும் முன்வைத்து இவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தத்தை தீர்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வி கண்டன. இத்தகைய நிலையில் தோட்டத் துரைமார் கடந்த வாரம் 1300 தொழிலாளர்களுள் 14 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முயற்சித்தனர். இக் கருங்காலிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. தவிர்க்க முடியாதவாறு கலவரம் ஏற்பட்டது. முதலாளிமார், கருங்காலிகள் ஆகியோர் சார்பில் பொலிசார் தலையிட்டனர். தொழிலாளர்கள் திருப்பித் தாக்கினார்கள். பொலிஸாருடன் எவ்வாறு போராடுவது என்பது பற்றியும் அவர்களுக்கு பயமுறுமல் இருப்பது எப்படி என்பது பற்றியும் முழு தொழிலாள வர்க்கமும் இத் தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். இத் தொழிலாளர்களுள் பெரும்பான்மையோர் செங்கொடி சங்கத்தைச் சேர்ந்தவர்களாகும்.

பொலிஸார் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு பல அட்டூழியங்களைச் செய்தனர். இது தொழிலாளர்களின் ஆத்திரத்தைக் கிளறியது. இரண்டு தொழிற்சங்கங்களும் கூட்டாகச் சேர்ந்து ஹட்டன் மாவட்டத்திலுள்ள தோட்டங்கள் யாவற்றிலும் பொது வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தினர். தொழிலாளர்களின் சக்திமிக்க ஆதரவு இப்போது வேலை நிறுத்தத்திற்கு கிடைத்தது. முதலாளிமார்கள் விட்டுக் கொடுத்து தொழிலாளர்களின் கோரிக்கைகள் யாவற்றையும் அளித்தனர். புரட்சிகர தொழிற் சங்க நடவடிக்கைகளை எவ்வாறு செய்தல் வேண்டும் என்பதற்கு இதுவோர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பல தோட்டத் தொழிலாளர்களை, பெண்கள் உட்பட பொலிசார் கைது செய்து பாதுகாப்பில் வைத்த போதிலும் அதைக் கண்டு பயமுறாமலும், பொலிசாரின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு அடிபணியாமலும் உறுதியுடன் மேபீல்ட் தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் ஏனைய தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மேலும் உத்வேகத்தையும் உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

''பொலிஸ் படைக்கு அஞ்சாதே'' என்ற குரல் தோட்ட பிரதேசத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரவிச் செல்கின்றது. இதுவோர் புரட்சிகர முன்னேற்றமாகும்.

## சி. டி. யூ. எப். வென்றெடுத்த மற்றுமோர் வெற்றி

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள இலங்கை சினிமா பிலிம் ஸ்டூடியோ ஊழியர் சங்கம் மற்றுமோர் பெரும் வெற்றியை சினிமாத்துறை ஊழியர்களுக்கு வென்றெடுத்துள்ளது. ஒரு வருடத்திற்கு முன்னர், சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட் தனது ஊழியர்களுக்கு அளிப்பதற்கு ஏற்றுக்கொண்ட வேலை நிபந்தனைகளையும் வாய்ப்புகளையும் தமது ஊழியர்களுக்கும் அளிப்பதற்கு சினிமாஸ் லிமிடெட், சிலோன் என்டடெயின்மென்ட் லிமிடெட், லிபேர்ட்டி, சவோய், நியூ ஒலிம்பியா தியேட்டேர்ஸ் லிமிடெட் ஆகிய கம்பனிகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இதற்கான ஒப்பந்தம் கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகார தொழிலாளர்களுக்கு உயர்ந்த அடிப்படைச் சம்பளமும் வருடா வருடம் உயர்ந்து செல்லக் கூடிய சம்பளத் திட்டத்தைக் கொண்ட உயர்ந்த சம்பள வீதமும் கிடைக்கும். சேமலாப நிதிக்கு முதலாளிமார் அளிக்கும் பங்குத் தொகை ஆறு சத வீதத்திலிருந்து எட்டு சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. மேலதிகமாக ஏழு நாள் வைத்திய லீவும் அளிக்கப்படும். சம்பள உரிமையுள்ள அரசாங்க விடுமுறைகள் இரண்டு நாட்கள் கூடுதலாக அளிக்கப்படும். சேவை செய்த வருடம் ஒன்றிற்கு ஒரு மாத முழுச் சம்பளம் என்ற ரீதியில் சேமலாப நிதித் திட்டம் உருவாக்கப்படுவதற்கு முந்திய சேவைக் காலத்திற்கு நஷ்ட ஈட்டுப் பணம் அளிக்கப்படும்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் சினிமா ஊழியர்களுக்கு மேலும் ஒரு வெற்றியை வென்றெடுத்துக் கொடுத்துள்ளது.

நம்மைச் சுற்றி ..... நவம்

# கல் வைக்கச் சென்ற டட்லியாருக்கு வடபகுதி திரிபுவாதிகள் மாலையிட்டு வரவேற்பு

## ◎ தேர்தலுக்காக தோசை மசால்வடை விருந்தளித்த திரிபுவாதி

## ◎ கட்டுக்காசைக் காப்பாற்ற மாஸ்கோ பயணம் லஞ்சம்

## ◎ தேநீர் வாங்க உதவிய சோவியத் புத்தகங்கள்

காங்கேசந்துறை துறைமுக விஸ்தரிப்பு வேலைகளுக்கு 'கல்' வைக்கச் சென்ற பிரதமர் டட்லியின் பரிவாரத்தை அவரின் அடிவருடிகளான தமிழ் காங்கிரஸ் கட்சியினரும் தமிழரசுக் கட்சியினரும் போட்டி போட்டு வரவேற்றனராம். தமது விசுவாசத்தைக் காட்டிக்கொள்வதற்கு இது அருமையான சந்தர்ப்பமல்லவா? இவர்கள் நடாத்திய தமாஷாக்களுக்கும் குறைவில்லை. ஆனால் இவற்றில் பொது மக்கள் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் டட்லி மீதுள்ள தமது வெறுப்பைக் காட்டியுள்ளார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் பாதம் தாங்கி டட்லியின் தலைமையிலுள்ள யு, என். பி. அரசாங்கம் எடுத்த மக்கள் விரோத நடவடிக்கைகளை மக்கள் மறந்துவிடவில்லை. மக்களின் வெறுப்பையும் ஆத்திரத்தையும் டட்லியும் அவரின் அடிவருடிகளும் உணர்ந்ததினால் போலும் வெகு விரைவில் டட்லி தமது 'விஜயத்'தை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார்.

டட்லிக்கு அவரது உள்ளூர் பாதந்தாங்கிகள் 'வரவேற்பு' அளித்ததில் எதுவித ஆச்சரியமுமில்லை. அவர்களின் கடமை தொண்டு செய்து கிடப்பதே யாகும்.

ஆனால் இம்முறை வட பகுதியில் டட்லிக்கு வேறொரு பகுதியிலிருந்தும் வரவேற்புக் கிடைத்தது. டட்லியே பிரமித்துவிட்டாராம், வட பகுதியிலுள்ள திரிபுவாதிகளும் கும்பலோடு சேர்ந்து கோவிந்தா போட்டிருக்கின்றார்கள். அழையா விருந்தாளி பொன்னம்பலம் இதில் அதிக அக்கறை காட்டியுள்ளார். வரவேற்பிற்காக ஆடி ஓடி வேலை பார்த்திருக்கின்றார், அவர் தலைவராகவுள்ள மல்லாகம் கிராமச் சபை 'அமோக வரவேற்பு' அளிப்பதில் பொன்னம்பலம் வெகு சிரத்தை எடுத்துள்ளார். ''பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களே! வருக! வருக!'' என்று கொடி கட்டி வரவேற்றாராம் அவர். அது மட்டுமல்ல. அவர் தலைவராக உள்ள அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் வரவேற்பு அளிக்கத் தவறவில்லை. ''தேசத்தின் முதல் மகனின் முறை மகனே வருக!'' என்ற கோஷத்தை தாங்கிய கொடி சங்க வாசலில் பறந்து கொண்டிருந்தது. சந்தர்ப்பவாதி பொன்னம்பலம் டட்லிக்கு வரவேற்பு அளிப்பதில் முன்னுக்கு நின்றதோடு மட்டுமல்லாமல் டட்லிக்குப் பின்னே நின்று அவரின் பேச்சையும் மொழி பெயர்த்துள்ளார். டட்லி வட பகுதியில் பேசிய கூட்டங்கள் யாவற்றிலும் தான் அவரின் பேச்சுக்களை மொழிபெயர்க்க வழி செய்யுமாறு கேளாமல் கேட்டுக் கொண்டாராம். பாவம் காங்கேசந்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் இவரின் 'சான்சை' வேறொருவர் தட்டிக்கொண்டு போய்விட்டாராம்.

டட்லிக்கு வரவேற்பு அளிப்பதில் முன்னுக்கு நின்ற திரிபுவாதி பொன்னம்பலம் மட்டுமல்ல. திரிபுவாதக் கும்பலின் அணியிலுள்ள இன்னொரு நபர், இவர் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உப தலைவர்களில் ஒருவருங்கூட, இணுவில் கிராமத்தில் 'மகோன்னத வரவேற்பு' அளித்துள்ளார். தெருவை மூடிப் பந்தல் போட்டு வரவேற்றிருக்கின்றார் இத் திரிபுவாதி. பொன்னம்பலம் மாலை போட்டே வரவேற்றார். இவரோ தனது ஞாபகார்த்தமாக மாம்பழமும் கொடுத்தனுப்பினாராம். ஏனைய திரிபுவாதிகளும் இந்த வரவேற்பிற்குத் தம்மாலான திருத்தொண்டை செய்துள்ளார்கள்.

வட பகுதிகளிலுள்ள திரிபுவாதிகள் டட்லிக்குப் பாத பூசை செய்வதையிட்டு நாம் ஆச்சரியப்படவில்லை. உண்மையில் நாம் கூறியவற்றை இவர்கள் சிறிது சிறிதாக மக்களுக்கு நிரூபித்து வருகின்றர்கள்,

திரிபுவாதம் என்பது பூர்ஷுவா வர்க்க சித்தாந்தத்தின் ஒரு வடிவம். சோஷலிசத்திற்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள வேற்றுமைகளை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் பூர்ஷுவா வர்க்க சர்வாதிகாரத்துக்கும் இடையிலுள்ள வேற்றுமைகளை திரிபுவாதிகள் மறுக்கின்றனர். அவர்கள் வக்காலத்து வாங்குவது உண்மையில் முதலாளித்துவ மார்க்கத்திற்கே. சோஷலிஸ மார்க்கத்திற்கல்ல, முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்க முனைபவர்களுக்கு தொழிலாள வர்க்கத்திற்கெதிராகப் போராட்டம் நடத்துகின்றவர்களுக்கு வலது கையாக விளங்குபவர்கள் திரிபுவாதிகளேயாகும். இது மார்க்சிஸ-லெனினிஸக் கோட்பாடு; மாசேதுங் சிந்தனை.

திரிபுவாதிகள் உலக ரீதியில் ஏகாதிபத்தியத்துடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து அவர்களுடன் கொஞ்சிக் குலவி மக்களின் புரட்சிப் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்துக் கழுத்தறுப்புச் செய்வதை உலக மக்கள் இப்போது உணர்ந்து வருகின்றனர். தமது வேலைகளை எப்போதோ உள்ளூரிலும் கெனமன் திரிபுவாதக் கும்பல் ஆரம்பித்துவிட்டனர். மக்கள் இனங் கண்டு வருகின்றார்கள்.

★

### திரிபுவாதிகளின் தேர்தல் ஸ்டண்ட்

முறை மகன் டட்லி தமிழ் மக்கள் மத்தியில் சுருப் பிடிப்பதற்காக தூண்டில் கொண்டு வட பகுதிக்கு விஜயம் செய்த அதே நாட்களில் திரிபுவாதி பீட்டர் கெனமன் கொழும்பு மத்திய தொகுதியிலுள்ள தமிழர்களை தன் பக்கம் வென்றெடுப்பதற்காக மத்திய தொகுதியிலுள்ள 'முக்கியமான' சில தமிழர்களுக்கு விருந்துபசாரம் செய்த செய்தி நமக்குக் கிடைத்துள்ளது,

பொதுத் தேர்தல் நெருங்கிவிட்டதல்லவா? எப்படியாவது தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெறத் துடித்துக்கொண்டிருக்கும் கெனமனின் விருந்துபசாரத்திற்கு விரல் விட்டெண்ணக் கூடிய சிலர் சென்றிருந்தார்களாம். கூடுதலானோர் சோற்றுப் பொருக்கிகளாம். பல வகையான பண்டங்கள் குவிக்கப்பட்டிருந்ததாம். மசால வடையும் தோசையும் கொடுக்க அவர் மறக்கவில்லையாம். உண்டு களித்த பின்னர், கெனமன் எழுந்து கொழும்பிலுள்ள தமிழ் மக்களின் வாக்குகளைத் தனக்குப் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டாராம். அவரின் மன்றாட்டங்களுக்கும் வேண்டுகோள்களுக்கும் செவி சாய்த்திருந்த கூட்டத்தினருக்குப் பீட்டர் குறிப்பிட்ட ஒரு விஷயம் சற்றேனும் பிடிக்கவில்லை, ''தமிழ் மக்கள் இப்போது முன்புபோல அவ்வளவு முற்போக்கானவர்கள் அல்ல. அவர்கள் மத்தியில் முற்போக்கு அம்சம் எள்ளளவும் இல்லை. இப்போது வலதுசாரியினரையே அவர்கள் ஆதரிக்கின்றனர்,'' என்று பீட்டர் கூறியதுதான் தாமதம் சிலர் துள்ளிக் குதித்தார்களாம். ''நீங்கள் எப்படி தமிழ் மக்கள் மத்தியில் முற்போக்கு அம்சம் அழிந்துவிட்டதெனக் கூறலாம்'' என அங்கிருந்த 'தொங்கு சதை' பீட்டரை இடைமறித்தாராம். பீட்டர் தனது பேச்சைத் தொடர முடியவில்லை. இன்னொருவர் 'எத்த'ப் பத்திரிகையின் தமிழர் விரோத, வகுப்புவாத திருப்பணிகளையும், தமது கும்பல் நடாத்திய ஊர்வலங்களில் போடப்பட்ட மசாலவடை கோஷங்களையும் தமது வகுப்புவாதக் கண்ணோட்டங்களையும் கூறிக் கண்ணீர் விட்டாராம். இந்த நிலையில் எந்த முகங் கொண்டு தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்பது எனக் கேட்டாராம். நாலரை வருட வகுப்புவாதக் கறையை நான்கு மாதங்களில் கழுவமுடியுமோ வென இன்னொருவர் பீட்டரைப் பார்த்துக் கேட்டாராம்.

பீட்டரின் நிலைமை தர்ம சங்கடமாகிவிடவே ஒருவாறு சமாளித்து கேள்வி கேட்டவர்களுக்கு வீட்டுக்கு எடுத்துச் செல்லப் பார்சல்களும் கட்டிக் கொடுத்தனுப்பிவிட்டாராம்.

பீட்டர் கெனமன் வைத்த விருந்துபசாரத்தைப்பற்றி எமக்கு அக்கறை இல்லை. ஆனால் அவர் குறிப்பிட்டதைப் போன்று தமிழ் மக்கள் அனைவரும் பிற்போக்குப் பாதையில் தான் செல்கின்றார்களா என்பதிலேயே நமக்கும் அவருக்கும் இடையில் வேறுபாடுண்டு. கெனமன் திரிபுவாதக் கும்பல் திரிபுவாதச் சேற்றிலும் பாராளுமன்றக் குட்டையிலும் மூழ்கிய பின்னர் படு சந்தர்ப்பவாதிகளாக மாறி கனல்கக்க வகுப்புவாதம் பேசி தமிழ் மக்களின் ஆதரவையும் ஏனைய சிறுபான்மையினரின் ஆதரவையும் இழந்ததிற்கு தமிழ் மக்கள் பொறுப்பாளிகளாகிவிட மாட்டார்கள். ஒரு காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வரிந்து கட்டியவர்கள் இன்று பார்க்குமிடமெல்லாம் தமிழ்ப் பேயைக் காண்பதாகக் கூச்சல் போட்டதினால்த்தான் தமிழ் மக்களின் ஆதரவை அவர்கள் இழந்துள்ளனர். இதற்கு தமிழ் மக்கள் பொறுப்பல்ல. தமிழ் மக்கள் அவர்மீது வைத்திருந்த மதிப்பை அவர் இழந்ததிற்கு அவரே காரணமாவார்.

ஆனால் ஒரு விடயத்தைப் பீட்டருக்கும் அவரது பாதந்தாங்கிகளுக்கும் கூறவேண்டியுள்ளது. நீங்கள் குறிப்பிடுவதைப்போன்று தமிழ் மக்கள் அனைவரும் பிற்போக்குவாதிகளுமல்ல; முதலாளித்துவ சக்திகளுக்கு முண்டு கொடுப்பவர்களுமல்ல. நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கெதிராக, முதலாளித்துவத்திற்குப் பூசை செய்யும் சாதி வெறியர்களுக்கெதிராக வடபகுதியில் கடந்த மூன்று வருடங்களாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான வழிகாட்டலின்கீழ் நடாத்தப்பட்ட துணிச்சலான மக்களைத் தழுவிய வெகுஜனப் போராட்டங்களைச் சிறிது ஞாபகப்படுத்திப் பார்த்தாலே உண்மையில் தமிழ் மக்கள் அனைவரும் பிற்போக்குக்குச் சாமரம் வீசுபவர்களா என்பது தெளிவாகிவிடும். எத்தகைய போராட்டங்களுக்கும் ஆதரவு கொடுக்க மறுத்தவர்களை, மாறாக காட்டிக் கொடுத்து மென்னியைத் திருகியவர்களை நிராகரித்துவிட்டு அவர்கள் சரியான பாதையில் முற்போக்குப் பாதையில் முற்போக்கு சிங்கள மக்களின் ஆதரவுடன் வீறுநடை போட்டு முன்னேறுகின்றனர். அவர்கள் முதலாளித்துவத்தை நிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்களை துடைத்தெறிய முற்பட்டுள்ளனர்.

கண்ட இடமெல்லாம் கள்ளத் தோணியைக் கண்டதினால் திரிபுவாதிகள் தோட்டப் பகுதிகளில் வெறும் பெயர்ப் பலகையைத் தொங்கவிட்டுக் கொண்டு கொட்டாவி விடுகின்றனர். ஆனால் தோட்டத் தொழிலாளர்களோ வர்க்கப் போராட்டப் பாதையைக் காட்டும் செங்கொடிச் சங்கத்தைச் சுற்றி அணிதிரள்கின்றனர். பீட்டர் குறிப்பிடுவதைப் போன்று தமிழ் மக்கள் அனைவரும் போராட்ட உணர்வை இழக்கவில்லை. அனைவரும் பிற்போக்குப் பாதையை நாடவில்லை.

ஒவ்வொரு இன மக்களின் மத்தியிலும் முரண்பாடுள்ள வர்க்கங்கள் உள்ளன. இன பேதத்தைக் கிளறிவிடாமல், வர்க்கப் பகைமையை கிளறிவிட்டு வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் மக்களை

8-ம் பக்கம் பார்க்க

# மேபீல்ட் தோட்ட தொழிலாளர் வேலைநிறுத்தம் வெற்றியீட்டியது

ஹட்டன் பகுதியிலுள்ள மேபீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த 1400 தொழிலாளர்கள் நவம்பர் 11ந் திகதி ஆரம்பித்த வேலை நிறுத்தத்தில் வெற்றிஈட்டியுள்ளார்கள். இத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்திலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலும் அங்கம் வகிக்கின்றனர். ஒரு சிலர் தேசிய தொழிலாளர் காங்கிரஸிலும் உள்ளனர்.

மேபீல்ட் தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தின்போது அவர்கள் மீது பொலிசார் நடாத்திய அட்டூழியங்களைக் கண்டிக்கும் முகமாக ஹட்டன் மாவட்டத்திலுள்ள பல தோட்டங்களைச் சேர்ந்த 25,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நவம்பர் 29ந் திகதி தொடக்கம் பொது வேலை நிறுத்தமொன்றை நடாத்தினர். இப்பொது வேலைநிறுத்தத்திற்கு செங்கொடிச் சங்கமும் தொழிலாளர் காங்கிரஸும் தலைமை தாங்கின.

நவம்பர் 29ந் திகதி காலையில் தொழில் கமிஷனர் தலைமையிலும் மாலையில் தொழில் அமைச்சர் தலைமையிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் கீழ்க்காணும் அடிப்படையில் வேலைநிறுத்தம் நிறுத்தப்பட்டது.

(1) (அ) காலை 6.45க்கும், 7க்கும் மதியம் 12க்கும் பின்நேரம் 1.30க்கும் மாலை 4.30க்கும் சங்கு ஊதப்படுவதோடு மிக விரைவில் மின்சார ஊது குழலை நிறுவுவதற்கு முதலாளிமார் நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) கொழுந்து பறிக்கும் தொழிலாளி ஒருவர் நாளொன்றுக்கு எடுக்க வேண்டிய கொழுந்தின் தொகை இரண்டாவது முறை கொழுந்து நிறுக்கும்போது தீர்மானிக்கப்படுவதோடு அத் தொகைக்கு போதுமான கொழுந்தை முதலாவது முறை நிறுக்கும்போது தொழிலாளி பறித்திராவிட்டால் அவரை வேலையினின்று திருப்பி அனுப்பக்கூடாது.

(இ) மூட்டுப் புடுங்கல் காரணமாக தொழிலாளர்களை ஏறுமாறுக தோட்டத்திலிருந்து லயனுக்கு அனுப்பவேண்டாமென கண்டக்டர் அருணசலத்திற்கு முதலாளிமார் கட்டளை இடுதல்.

(2) இப்போது கசுவல் முறையில் வேலை செய்யும் பிள்ளைகளில் 60 பேரையாவது பதிவு செய்வதோடு 1970 மார்ச்சு மாதத்திற்கு முன்பாக அவர்களை பதிவுசெய்தல்.

(3) 1967 டிசம்பரில் அமுலிலிருந்த களை பிடுங்கலுக்கான பழைய சம்பளத் திட்டத்தை 1969 டிசம்பர் 1ந் திகதி முதல் பழையபடி அமுல்படுத்தல். இச் சம்பளத் திட்டத்தை கணிக்கின்றபோது நாணய மதிப்பிறக்க அலவன்சையும் சேர்த்துக்கொள்ளல். பாக்கிப் பணம் சம்பந்தமாக தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் சங்கங்களும் பேச்சுவார்த்தை நடாத்துதல்.

(4) 1969 நவம்பரில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின்போது ஏற்பட்ட சம்பவங்கள் சம்பந்தமாக எந்தவொரு தொழிலாளியாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் முதலாளிமார் அதனை தொழில் கமிஷனரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். தொழில் கமிஷனர் முதலாளிமாருக்கும் சங்கங்களுக்கும் அறிவித்து தகுந்த விசாரணை நடாத்திய பின்னர் முதலாளிமாருக்கு தனது சிபாரிசைச் செய்வார். அவரின் சிபாரிசை சங்கங்களோ அல்லது முதலாளிமாரோ ஏற்காவிட்டால் தொழில் அமைச்சர் விசாரணை செய்த பின்னர் அப் பிணக்கைக் கட்டாய மத்தியஸ்தத்திற்கு விடுவார்.

(5) மத்திய மாகாண (தெற்கு) பொலிஸ் சுப்பிரின்டன்டென்ரை டிசம்பர் 6ந் திகதி ஹட்டனில் சங்கங்கள் சந்திக்கவேண்டும். நேரத்தையும் இடத்தையும் அவர் சங்கங்களுக்கு அறிவிப்பார்.

மேபீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும் ஹட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தமும் டிசம்பர் 1ந் திகதி முடிவடைந்தது. அதற்கு முன்னர் தொழிற் சங்கத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர் மத்தியில் உரையாற்றினார்கள்:

கசுவலாக வேலை செய்யும் பிள்ளைகளைப் பதிவு செய்தல், களை பிடுங்கலுக்கான சம்பளத் திட்டத்தைப் பழையபடி அமுலுக்குக் கொண்டுவருதல் ஆகிய இரு பிரதான கோரிக்கைகளையும் முதலாளிமார் ஏற்க மறுத்ததினால் தொழில் கமிஷனர் 22ந் திகதி கூட்டிய மாநாடு தோல்வி அடைந்தது.

ஒரு சில கருங்காலிகளுக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் வேலை கொடுக்க முதலாளிமார் 23ந் திகதி முயன்றனர். இது தொழிலாளர்களின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. இதனால் கலவரமும் ஏற்பட்டது. முதலாளிமார் பொலிஸ் படையின் உதவியை நாடினார்கள். தோட்டத்திற்குள்ளே பொலிசார் குவிக்கப்பட்டனர். பொலிசார் தொழிலாளர்களை, குறிப்பாகப் பெண்களைக் கொடுமைப்படுத்தினார்கள். பல தொழிலாளர்கள் காயமடைந்தனர். 20க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், 9 பெண்கள் உட்பட கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

முதலாளிமாரின் ஆத்திரமூட்டும் செயல்களையும் பொலிசாரின் அட்டூழியங்களையும் எதிர்த்துத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள். தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தினால் முதலாளிமார் தொழிலாளர்களின் கோரிக்கைகளை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

---

## இன்ஜினியரிங் தொழிலாளருக்கு

# நாளொன்றுக்கு ரூ. 1-35 சதம் சி. டி. யூ. எப். வென்றெடுத்தது

நவம்பர் மாதம் 17ந் திகதி நடைபெற்ற இன்ஜினியரிங் தொழிலாளர் சம்பள நிர்ணய சபைக் கூட்டத்தில் சகல பிரிவுகளைச் சேர்ந்த இன்ஜினியரிங் தொழிலாளர்களுக்கும்நாளொன்றுக்கு ரூ. 1.35 சதம் சம்பள உயர்வு அளிக்கத் தீர்மானிக்கப் பட்டது.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன், இன்ஜினியரிங் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 1.35 சதம் சம்பள உயர்வு அளிக்கப்பட வேண்டுமென சமர்ப்பித்த தீர்மானத்தை விவாதிப்பதற்காக இக் கூட்டம் நடைபெற்றது.

நீண்ட விவாதத்திற்குப் பின்னர் சம்பள நிர்ணய சபை இத் தீர்மானத்தை பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக் கொண்டது. இத் தீர்மானத்திற்கு ஆதரவாக ஏழு பேரும் எதிராக மூவரும் வாக்களித்தனர். இத் தீர்மானத்தை மீண்டும் ஒரு முறை சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றி அதற்கு தொழில் மந்திரியின் கைபொப்பம் கிடைத்ததும் இது சட்டபூர்வமானதாகும். இது சட்டபூர்வமானதன் பின் மேற்கண்ட முறையில் இன்ஜினியரிங் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும்.

| | தற்பொழுது கிடைக்கும் சம்பளம் | ரூபா மதிப்புக் குறைப்புப் பணம் | தொழில் கோர்ட் தீர்ப்புப் பணம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்சியற்ற தொழிலாளருக்கு | 4.50 | .40 | .08 | + | 1.35 | = | 6.33 |
| அரை பயிற்சி தொழிலாளருக்கு | 5.00 | .40 | .08 | + | 1.35 | = | 6.83 |
| பயிற்சி பெற்ற தொழிலாளருக்கு | 5.60 | .40 | .08 | + | 1.35 | = | 7.42 |

இது இன்ஜினியரிங் தொழிலாளர்களுக்கு இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் வென்றெடுத்த மற்றுமொரு முக்கிய வெற்றியாகும். இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள ஐக்கிய இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தில் சகல இன்ஜினியரிங் தொழிலாளர்களையும் ஸ்தாபன ரீதியில் அணிதிரளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் வெளியிட்ட ஒரு துண்டுப் பிரசுரம்.)

வாசியுங்கள்
தொழிலாளி
விலை சதம் 10
விபரங்களுக்கு:-
121. யூனியன் பிளேஸ்
கொழும்பு-2

---

## கம்யூனிஸ்ட் கட்சி

— சுபத்திரன் —

வழி நடத்திச் செல்கின்ற சக்தி-எங்கள்
வளமான சிந்தனைக்கு வாழ்வூட்டும் சக்தி
பழி தீர்க்கும் போர் முறைகள் காட்டி-ஈழப்
பாட்டாளி வர்க்கத்தை ஒரு கொடியிற் கூட்டி
விழித்தெழுந்த மக்களெல்லாம் சேர்த்து-நாளை
விழப் போகும் ஏகாதிபத்தியத்தைப் பார்த்து
ஒழிக என ஒலிக்கின்ற நாதம்-எங்கள்
உயிரான மாஓவின் சிந்தனையின் போதம்

---

## கடவத்தை சிலோன் ஸ்டோர்ஸ் அன்ட் எனமெலிங் தொழிலாளர் வேலைநிறுத்தம் தொடர்கிறது

கடவத்தையிலுள்ள சிலோன் ஸ்டோர்ஸ் அன்ட் எனமெலிங் தொழிற்சாலையில் கடமையாற்றும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது, கருணநாயக்கா என்னும் தொழிலாளி நவம்பர் 7ந் திகதி வேலை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இவ் வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது. இலங்கை பொது, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 300க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளார்கள்.

# பாலஸ்தீன கொரில்லா போர் வி

# ஆவலுடன் படிக்கின்றனர்

பாலஸ்தீன கொரில்லாப் போர் வீரர்கள் பலர் மாஓவின் நூல்களை ஆவலுடன் படிக்கின்றனர். தலைவர் மாஓவின் போதனைகளைப் பின்பற்றி சீனாவின் ஆயுதப் புரட்சிப் பாதையில் சென்றால் பாலஸ்தீன் நிச்சயம் விடுதலையடையும் என பலர் உறுதியுடன் கூறினர்.

பாலஸ்தீன கொரில்லாப் போர்வீரர்கள் கடும் யுத்த நடவடிக்கைகளின் மத்தியிலும் மாஓவின் நூல்களை கவனமாகப் படிக்கின்றனர். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளரை கடுமையாக தாக்குவதற்கு அவர்கள் தமது தளங்களை அடிக்கடி மாற்றிக் கொள்கின்றனர். அந்தச் சமயத்திலும் கூட மாஓவின் நூல்களை அவர்கள் மறக்காமல் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர். பல தளங்களில் நடமாடும் வாசிகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ் வாசிகசாலைகளுக்கு அறைகளோ, மேசைகளோ கதிரைகளோ கிடையாது. அங்கு உள்ளதெல்லாம் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோரின் நூல்களும் பாலஸ்தீன புரட்சி பற்றிய நூல்களும் சஞ்சிகைகளும் கொண்ட ஒரு சில சூட்கேஸுகள் மட்டுமே.

இங்கு ''மாசேதுங்கின் தேர்ந்த கட்டுரைகள்'' ''மாசேதுங்கின் இராணுவக் கட்டுரைகள்'' ''மாசேதுங்கின் மேற்கோள்கள்'' மற்றும் ''நீண்ட நாள் யுத்தம் பற்றி'' ''ஜப்பானுக்கெதிரான கொரில்லா யுத்தத்தில் உபாய தந்திரப் பிரச்சினை'' ''ஒரு சிறு பொறியினால் பெரும் காட்டுத் தீயை உண்டாக்க முடியும்'' என்பன போன்ற கட்டுரைகளையும் அரபு மொழியில் கொரில்லா வீரர்கள் படிக்க முடியும்.

பல போர்வீரர்கள் ஓய்வு நேரங்களில் மர நிழலிலும், கூடாரங்களிலும் இருந்து மாஓவின் நூல்களை உணர்வு பூர்வமாக படிக்கின்றனர். சில சமயங்களில் பொறுப்பதிகாரிகள் போர்வீரர்களின் கூட்டுப் படிப்பையும் விவாதங்களையும் ஒழுங்கு செய்கின்றனர். ''தலைவர் மாஓவின் நூல்களைப் படிக்கும்போது உள்ளம் உற்சாகமடைகின்றது. பாலஸ்தீனத்திற்கும் சீனத்திற்குமிடையே பல பொது நிலைமைகள் உள்ளன. தலைவர் மாஓவை முதல்வராகக் கொண்ட மகத்தான சீனப் புரட்சி எமது பாலஸ்தீனப் புரட்சிக்கு ஒளிமயமான உதாரணமாக விளங்குகிறது.



பாலஸ்தீன் விடுதலை ஸ்தாபனம்
"அல்பத்தாஹ்"வின் சின்னம்

மாஓவின் கட்டுரைகளில் இருந்து சீனப் புரட்சியின் அனுபவங்களை எம்மால் கிரகித்துக் கொள்ள முடிகிறது'' என்று பல போர்வீரர்கள் கூறினர்.

மாஓவின் பல நூல்களைப் படித்த அல்பதாஹ்வின் ஒரு போர்படையான அல் அசிபாவைச் சேர்ந்த போர்வீரரான அபூமசின் கூறியதாவது ''தலைவர் மாஓ எமது சகாப்தத்தின் தலைசிறந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்டாவர். அவர் பாலஸ்தீன மக்களின் மிகவும் நெருங்கிய நண்பர். தோழர் மாசேதுங் · சீனாவுக்கு தலைமை தாங்குவதினாலும் சீன மக்கள் எமது போராட்டத்தை உறுதியுடன் ஆதரிப்பதாலும் பாலஸ்தீனியர்களாகிய நாங்கள் சீனாவை மனமுவந்து நேசிக்கின்றோம். மாசேதுங் சிந்தனை எமது புரட்சிக்கு பெரும் உதவியாக உள்ளது. தலைவர் மாஓ காட்டிய பாதையில் நாம் முன்னேறிச் சென்றால் பாலஸ்தீனப் புரட்சி வெற்றிபெறுவது திண்ணம்.''

பல கொரில்லாப் போர்வீரர்கள் மாஓவின் நூல்களை தாங்கள் படிப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றை அகதிகள் முகாம்களுக்கும் கொண்டு வந்து, அங்குள்ள படைவீரர்களையும், மற்றவர்களையும் படிக்கச் செய்கின்றனர். அம்மானுக்கு அருகாமையில் உள்ள மகா அகதி முகாமிலுள்ள இஸ்மாயில் என்ற இளம் போர்வீரன் தனது சட்டைப் பையிலிருந்து ''ஒரு சிறு பொறி காட்டுத் தீயைப் பரப்ப முடியும்'' என்ற கட்டுரையை எடுத்து'' நான் இதை தினமும் படிக்கின்றேன். மாஓவின் இந்தக் கட்டுரையிலிருந்து பாலஸ்தீனப் புரட்சியின் வருங்காலத்தை எம்மால் உணர முடிகிறது. எமக்கு முன்னால் பல கஷ்டங்கள் இருந்தபோதிலும், புரட்சிகரப் போராளிகள் மூட்டிவிட்ட ஆயுதப் போராட்டத் தீயை ஒருபோதும் அணைக்க முடியாது. பாலஸ்தீனப் புரட்சி நிச்சயமாக சிறு பொறியிலிருந்து காட்டுத் தீ போல் வளரும்'' என்றார். மாஓவின் பல கட்டுரைகளைப் படித்த இவர் மேலும் கூறியதாவது: ''மாசேதுங் சிந்தனை எல்லையற்றளவு பலமுடைய ஆத்மீக அணுகுண்டாகும். இத் தத்துவ ஆயுதத்தை கிரகித்துக்கொண்டால் ஏகாதிபத்தியம், திரிபுவாதம், யூதராதிக்கம் ஆகியவற்றை தோற்கடிக்க முடியும்''.

கடந்த ஜூலை மாதக் கடைசியில் ஜோர்தான் நதியின் கிழக்குக் கரையிலுள்ள கறமே என்ற இடத்துக்கு அருகேயுள்ள ''அல் - அசிபா'' பகுதியொன்றின் கூடாரத்திற்கு நான் சென்றபொழுது, வெல்லற்கரிய மாசேதுங் சிந்தனை பாலஸ்தீனக் கொரில்லாக்களிடம் நாளுக்குநாள் இரண்டறக் கலந்து வருவதைக் காணக் கூடியதாய் இருந்தது. இக் கொரில்லாப் படையில் 40 வயதுக்கு மேற்பட்ட அனுபவம் நிறைந்த கொரில்லாக்களும், 13, 14 வயதுக்குட்பட்ட இளம் போர்வீரர்களும் இருக்கின்றனர். பாடசாலைக்குப் போக முடியாத விவசாயிகளின் புதல்வர்களும், இளம் பாடசாலை மாணவர்களும் இருந்தனர். இவர்கள் பல பாகங்களிலிருந்தும் ஒரே நோக்கத்திற்காக — தமது தாயகத்தின் விடுதலைக்காக வந்தவர்கள்.

இங்குள்ள படையினருக்கு பொறுப்பதிகாரியாக உள்ள அபுசிபா என்பவர் ஒரு இளம் தளபதி. மாஓவின் கட்டுரைகளை அவர் பெரிதும் விரும்புகின்றார். அவர் கூறியதாவது: ''மக்கள் படை பற்றியும், மக்கள் யுத்தம் பற்றியும் மாஓ அவர்களின் போதனைகள்தான் எமது கொரில்லாப் படையின் வழிகாட்டும் கோட்பாடுகளாகும். மாஓ அவர்களால் உருவாக்கப்பட்டு அவரால் தலைமைதாங்கப்படும் சீன மக்கள் விடுதலைச் சேனையை சிறந்த எடுத்துக்காட்டாக பாலஸ்தீன கொரில்லாக்களாகிய நாம் கருதுகின்றோம். ''சேனை மக்களுடன் நன்றாக இணைந்திருக்க வேண்டும். மக்கள் அதை தாமதமாகக் கருதக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.'' என்ற மாஓவின் போதனை எமது கொரில்லாக்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். அத்தகைய சேனை வெல்லற்கரியது. இஸ்ரேலிய யூதராதிக்கம் மட்டுமல்லாது ஏகாதிபத்தியம், திரிபுவாதம், பிற்போக்கு சக்திகள் ஆகியவையும் எமது எதிரிகளே. வெகுஜனங்களின் உதவியில்லாமல் எமது கொரில்லாக்கள் இருக்கவே முடியாது''

யுத்தத்தின் இடைவேளைகளில், இப் படையின் போர்வீரர்கள் அநேகமாக விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கையில் உதவி செய்கின்றனர்; உள்நாட்டுப் படையினருக்கு துப்பாக்கிகளை பரிசளிக்கின்றனர்; அவர்களுடன் சேர்ந்து இரவில் காவல் புரிகின்றனர். இப் படை ஒரு முந்திரித் தோட்டத்தில் இருந்தபோதிலும் வெகுஜன கட்டுப்பாட்டை மீறி ஒரு முந்திரியையேனும் பறித்தது கிடையாது. அப் பிரதேசத்திலிருந்து உள்நாட்டுக்குச் சென்றுள்ள விவசாயிகளின் முந்திரி தோட்டங்களையும், வீடுகளையும் கொரில்லாக்களையும் பராமரிக்கின்றனர். படையினர் தங்குமிடத்தில் ஒழுங்காக கூட்டங்கள் நடைபெறுகின்றன. அங்கு விமர்சனமும், சுய - விமர்சனமும் நடத்தப்படுகின்றது.

பாலஸ்தீன வெகுஜனங்கள், கொரில்லாக்கள் தமது புதல்வர்கள், புதல்விகளது படை என கருதுகின்றனர். இஸ்ரேலியர்கள் கைப்பற்றியுள்ள பகுதிகளில் வாழும் பாலஸ்தீனியர்கள் சிலர் கொரில்லாக்களுக்குச் செய்திகள் அனுப்புவதும், வழிகாட்டிகளாய் இருப்பதும், தமது உயிரையே பணயம் வைத்து கொரில்லா நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பளிப்பதும் சகஜமாகி வருகிறது. மலைப்பாதைகள் பனியால் மூடப்பட்ட போது பிரதேசவாசிகள் கொரில்லாக்களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தனர். பலர் கொரில்லாக்களுடன் சேர்ந்து எதிரியைத் தாக்கிய போது போராடியும் இருக்கின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளுக்கு உத்தரவு பிறப்பித்த போதெல்லாம், மக்கள் மீது உள்ளன்பும், எதிரி மீது கடும் பகையையும் கொண்ட கொரில்லாக்கள் நான் முந்தி நீ முந்தி என்று போராடத் தயாராகுவர்; அதற்கு விண்ணப்பம் செய்வர். போராட்டத்தின் போது மாஓவின் மக்கள் யுத்தம் பற்றிய உபாய தந்திரங்களைச் செயல்படுத்த பெரிதும்

## சின்ஹுவா நிரு

## கெய்ரோ

## சீன அ

## போராட்ட உ

**சீனாவிற்கும், அல்பேனியாவிற்கும் ... தந்திர உறவுகளின் ஸ்தாபிதத்தின் ... நிறைவு விழாவைக் கொண்டாடுமுக ... னிய மக்களிடையிலுள்ள போராட் ... புறவு நீடூழி வாழ்க'' என்ற தலைப்பி ... யத் தலையங்கத்தை நவம்பர் 23 ... தாங்கி வெளிவந்தது. தலையங்கத் ... பின்வருமாறு.**

இன்று சீன மக்கள் சகோதர அல்பேனிய மக்களுடன் சேர்ந்து, சீனாவிற்கும் அல்பேனியாவிற்குமிடையிலுள்ள ராஜதந்திர உறவுகளின் ஸ்தாபிதத்தின் 20வது வருடாந்தரத்தை கூட்டாக ஒன்று சேர்ந்து கொண்டாடுகின்றார்கள்.

தமது நீண்டகால போராட்டங்களின் மூலம் இரு நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தினாலும் மக்களாலும் வென்றெடுக்கப்பட்ட புரட்சியின்

# ...வீரர்கள் மாஓவின் நூல்களை

# பாலஸ்தீனப் புரட்சிக்கு ஒளிமயமான மாசேதுங் சிந்தனை சரியான பாதையை காட்டுகிறது

...ன்ஹுவா நிருபர்
...கெய்ரோ

முயல்கின்றனர். ''உனது முறையில் நீ போராடு. எமது முறையில் நாம் போராடுவோம். வெல்ல முடியும் என்றபோது நாம் போராடுவோம்; இயலாதபோது விலகி நிற்போம்'' என்ற வகையில் எதிரியைப் பலமாகத் தாக்கி அவனுக்குப் பெரும் நஷ்டத்தை உண்டாக்கினர்.

இத் தளத்திற்குச் சென்ற அன்றைய தினம் மற்றுமொரு தளபதியான அபு மல்வான் என்பவரின் தலைமையிலான சுரங்கக்குண்டு அகற்றும் படையினர் வந்து சேர்ந்தனர். எதிரியினுல் புதைக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட சுரங்க குண்டுகளைத் தோண்டி எடுத்தனர். எதிரி நடமாடும் இடங்களில் பலவற்றைப் புதைத்துவிட்டு, சிலவற்றை தம்முடன் கொண்டு வந்தனர். எதிரியின் குண்டுகளாலேயே அவனுக்கு குழிபறித்தனர். தளபதி அபு மல்வான் பின்வருமாறு கூறினுர்: ''எதிரிகளின் விமானங்களும், டாங்கிகளும் எம்மை வெல்ல முடியவில்லை. இச் சுரங்கக் குழிகள் எமது பாதையை எவ்வாறு தடுக்க முடியும்? எதிரி நுட்பமான ஆயுதங்களையும், ஆயுத பலத்தையும் நம்பியிருக்கிருன். நாங்கள் வீரத்தையும், அரசியல் உணர்வையும், மக்களின் ஆதரவையும் நம்பியிருக்கின்ருேம். ஆயுதபாணியான எதிரியை சிறு ஆயுதங்களால் சிறந்த முறையில் தோற்கடிக்க முடியும் என்பதை உண்மை நிலைமைகள் நிரூபித்துள்ளன.

கொரில்லாக்கள் எதிரியைத் தாக்க இரவு நல்ல நேரம். ஓரிரவு, ஜோர்தான் நதியின் மேற்கு கரையில் ஜெரிேனவுக்கு அருகில் உள்ள எதிரிப்படை ஒன்றை இந்த கொரில்லாக்கள் தாக்கினர்; ஒரு கண்காணிப்பு நிலையத்தில் இருந்த அதனை நான் பார்வையிட்டேன். எதிரி பல பாகங்களிலும் ஆகாயத்தில் வெடி வைத்தனர். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படையினர் மின்சாரக் கம்பிகள் மூலமும் சுரங்க குழிகள் மூலமும், மற்றும் வேறு பல பாதுகாப்பு முறைகளையும் வைத்திருந்தபோதிலும் அவர்கள் அல்லோல கல்லோலப்பட்டு மரங்களுக்கும், பத்தைகளுக்கும் வெடிவைத்தனர். அங்கு ஒரு மிருகம் அசைந்தபோது, பீதியடைந்து அதற்கும் வெடி வைத்தனர். ஒரு கொரில்லா வீரர் பின்வருமாறு கூறினுர்; ''ஏகாதிபத்தியமும், சகல பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகள்'' என்ற மாஓவின் கூற்று எவ்வளவு உண்மை! சென்ற வருடம் மார்ச் 21ந் திகதி நாம் நடத்திய புகழ்மிக்க கரமென் யுத்தத்தில், இஸ்ரேலிய கடதாசிப் புலியை கிழித்து அதன் சுய ரூபத்தை வெளிப்படுத்தினேம். ஒன்றரை வருடங்களுக்கு முன் இருந்ததைவிட இன்று பாலஸ்தீனிய கொரில்லாக்கள் பலமடைந்துள்ளனர். இஸ்ரேலியர்களின் குழப்ப நிலை அவர்கள் வெறும் கடதாசிப் புலிகள் என்பதை எடுத்துக் காட்டுகிறது''

## தலைவர் மாஓ வாழ்க!

அபு ஷெகின் என்ற முதிய போர்வீரர் கூறியதாவது: ''நாம் ஆயுதம் தாங்காத காரணத்தால்தான் எமது தாய் நாட்டிலிருந்து நாம் துரத்தப்பட்டோம். இன்று எமக்கு ஒரு சேனை உண்டு. அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் திரிபுவாதமும், ஐ. நா. சபையும் எமது முன்னேற்றத்தை இனிமேலும் தடை செய்ய முடியாது பாலஸ்தீன் விடுதலை அடையும்வரை பரம்பரை பரம்பரையாக போராடுவோம்''

கொரில்லாத் தளங்களுக்கும், அகதி முகாம்களுக்கும் நான் சென்றபோது, புரட்சிகர பாலஸ்தீனிய மக்கள் அனைவரும், சீன மக்களின் மகத்தான தலைவர் மாஓ அவர்களை வாழ்த்தியதை நான் கண்டேன். அம்மானுக்கு அருகேயுள்ள அகதி முகாம்களில் தலைவர் மாஓவின் படங்களை நான் கண்டேன். பலர் என்னைப் பார்த்து'' பாலஸ்தீனிய மக்கள் தலைவர் மாஓவையும் சீன மக்களையும் பெரிதும் நேசிக்கின்றனர் என்பதை தெவிக்கவும் என கூறினர், பாலஸ்தீன கொரில்லாப் போர்வீரர் ஷெரிப் பின்வருமாறு கூறினுர்: ''தலைவர் மாஓ நீடூழி வாழ்க! புரட்சியை இறுதிவரை நடத்த நாம் தலைவர் மாஓவின் போதனைகளை இறுதிவரை பின்பற்றுவோம்!''

இது பாலஸ்தீனிய மக்களின் பொது ஆசையாகும்.

> **போராடு**
>
> **நீ போராடு! துணிந்து போராடு உன்னிடம் இழப்பதற்கு ஒன்றுமே இல்லை, உன் அடிமைத் தளையைத் தவிர. பெறுவதற்கோ இந்த உலகம் இருக்கிறது.**
>
> -கார்ல் மார்க்ஸ்

# அல்பேனிய மக்களுக்கிடையிலுள்ள ...ட்ட உணர்வுள்ள நட்புறவு நீடூழி வாழ்க!

**...னியாவிற்கும் இடையிலுள்ள ராஜ ...ஸ்தாபிதத்தின் 20 வது ஆண்டு ...கொண்டாடுமுகமாக ''சீன அல்பே...ள்ள போராட்ட உணர்வுள்ள நற்... என்ற தலைப்பிடப்பட்ட ஒரு ஆசிரி... நவம்பர் 23 ல் ''மக்கள் தினசரி'' தலையங்கத்தின் பூரணவாசகம்**

வெற்றியின் விளைவுதான் சீனுவிற்கும் அல்பேனியாவிற்குமிடையில் ராஜதந்திர உறவுகளின் ஸ்தாபிதம். சீனுவிற்கும் அல்பேனியாவிற்குமிடையில் ராஜதந்திர உறவுகளின் ஸ்தாபித காலத்திலிருந்து 20 வருடங்களில் எமது இரு கட்சிகளும், இரு நாடுகளும், இரு மக்களும் மார்க்ஸிஸம்—லெனினிஸத்தினதும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தினதும் பதாகையின்கீழ் தோளோடு தோள் சேர்ந்து முன்னிற்கு வீறுநடை போட்டு சென்றுள்ளார்கள். எமது புரட்சிகர நட்புறவும் போராட்ட ஐக்கியமும் நிதானமாக ஒருமுகப்படுத்தப்பட்டு விருத்திசெய்யப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியத்திற்கும், நவீன திரிபுவாதத்திற்கும் பல்வேறு நாடுகளிலுள்ள பிற்போக்குவாதிகளுக்கும் எதிரான பொதுப் போராட்டத்திலும், சோஷலிஸப் புரட்சியினதும் சோஷலிஸ நிர்மாணத்தினதும் பொது லட்சியத்திலும் சீனுவினதும் அல்பேனியாவினதும் மக்கள் எல்லா நேரத்திலும் ஒருவரை மற்றவர் ஆதரித்து உதவிசெய்துள்ளார்கள். சீன மக்கள் அல்பேனிய மக்களின் உண்மையான நண்பர்களாகவும் தோழர்களாகவும் அல்பேனிய மக்கள் சீன மக்களின் உண்மையான நண்பர்களாகவும் தோழர்களாகவுமிருக்கின்றார்கள். சகோதர கட்சிகளுக்கும் சகோதர நாடுகளுக்கும் சகோதர மக்களுக்கும் இடையிலுள்ள உறவுகளில் ஒரு மாதிரி உதாரணமாக எமது நட்புறவு இருக்கின்றது.

அல்பேனிய மக்கள் பிரமாண்டமான உயரத்தையுடைய வீரமிக்க மக்கள் சிறந்த மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட்டான தோழர் அன்வர் ஹோஷாவின் தலைமையின் கீழுள்ள அல்பேனிய தொழிலாளர் கட்சியின் விவேகமான தலைமையின்கீழ்அல்பேனிய மக்கள் மிருகத்தனமான பலாத்காரத்திற்கும் கஷ்டங்களுக்கும் அஞ்சாமல், ஏகாதிபத்தியத்திற்கும் திரிபுவாதத்திற்கும் எதிரான மகத்தான போராட்டத்தில் சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தினதும் உலகின் புரட்சிகர மக்களதும் கடுமையான அதிர்ச்சிப் படையின் பாத்திரத்தை வகித்துள்ளார்கள். ஏகாதிபத்தியம், திரிபுவாதம், பிற்போக்கு ஆகியவற்றின் சுற்றிவளைப்பு இருந்தபோதும் அல்பேனிய மக்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மேம்படுத்துவதிலும் சோஷலிஸப் பாதையை எடுப்பதிலும் உறுதியாக இருந்துள்ளதுடன் புரட்சிமய இயக்கத்திலும் சோஷலிஸ நிர்மாணத்திலும் மகத்தான வெற்றியின் மேல் வெற்றியை வென்றெடுத்து இதன்மூலம் அல்பேனிய மக்களை ஒரு அசைக்க முடியாத கொத்தளமாகச் செய்துள்ளார்கள். இப்படிப்பட்ட ஒரு புரட்சிகர போராட்ட தோழர்களாக அல்பேனிய மக்களை வைத்திருப்பதில் சீன மக்கள் பெருமையடைகின்ருர்கள்.

தமது நீண்டகால புரட்சிப் போராட்டத்தில் சீன மக்கள் சகோதர அல்பேனிய மக்களின் உறுதியான ஆதரவை எல்லா நேரத்திலும் அனுபவித்துள்ளார்கள். அல்பேனிய தொழிலாளர் கட்சியும் அல்பேனிய மக்களும், எமது நாட்டின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியில் நாம் வென்றெடுத்த வெற்றிகளையும் எமது கட்சியின் ஒன்பதாவது தேசிய காங்கிரஸினுல் செய்யப்பட்ட சாதனைகளையும் உற்சாகமாகப் பாராட்டி பெருமளவு போற்றியுள்ளார்கள். சீன மக்களுக்கு இது ஒரு பிரமாண்டமான உத்வேகமாக இருக்கின்றது. சீன, அல்பேனிய மக்களுக்கிடையிலுள்ள புரட்சிகர நட்புறவு சீன மக்களின் சிறந்த முதல்வர் தோழர் மாஓசேதுங்கினுலும் அல்பேனிய மக்களின் மகத்தான தலைவர் தோழர் அன்வர் ஹோஷாவினுலும் நேரடியாக உறுதியாக்கப்பட்டுள்ளதுடன் மார்க்ஸிஸம் — லெனினிஸம், பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகவே அது தகர்க்க முடியாததாக இருக்கின்றது. உலகத்தில் எது நடந்தாலும் பரவாயில்லை,

8-ம் பக்கம் பார்க்க

உலக வலம்
உஸ்மான்

# 'மலேஷிய' மக்களின் புரட்சிகர எழுச்சியை கண்டு ஆளும் கும்பல் நடுங்குகிறது

இவ்வாண்டின் முற்பகுதியில் ''மலேஷியா''வில் ''இனக் கலவரங்கள்'' வெடித்த பொழுது, நாம் எழுதியிருந்தவை இப்பொழுது மெய்யாகி வருகின்றன. நாட்டிலே பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், வற்றிவரும் வெளிநாட்டு நாணயச் சேமிப்பு, உயர்ந்து கொண்டு போகும் இராணுவ - பொலிஸ் செலவினங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படும் இலட்சக் கணக்கான மக்கள் அரசாங்கத்தை அதிருப்தியுடன் நோக்கும் நிலையில், அரசாங்கமே இக் கலவரங்களைத் தூண்டி, மக்களைப் பிரித்தாளவும், ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளைப் பலவீனப்படுத்தவும் சூழ்ச்சி செய்தது என்று நாம் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அது மட்டுமல்லாது, இத் திட்டத்தைத் தொடர்ந்து பாசிஸ்டு அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்றும், ஆளும் கும்பலுக்குள் சிறுச்சிறு உள்முரண்பாடுகள் தவிர்க்க முடியாதபடி தோன்றியுள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தோம். இப்போது மலாயாவிலிருந்து கிடைக்கும் உத்தியோகப்பற்றில்லாத உண்மைச் செய்திகளை நோக்கும்பொழுது, நிலைமை மோசமாகிக் கொண்டு வருவது புலனாகும்.

1. சில நாட்களுக்கு முன் உதவிப் பிரதமரும் கொலைகாரனுமான துன் அப்துல் ரஸாக் வானொலியில் உரையாற்றுகையில், இப்பொழுது அந்நாட்டில் உள்ள ''ஜனநாயக'' நிறுவனங்கள் செவ்வனே இயங்க மாட்டாமல் இருப்பதாகவும், வருங்காலத்தில் நல்ல முறையில் செயற்படக் கூடிய புதிய ''ஜனநாயக'' நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும், மக்கள் ''அரசியல் முதிர்ச்சி'' பெறும்வரை சில சுதந்திரங்களை வழங்க முடியாமலிருக்கும் என்றும் குறிப்பிட்டான். தேச பக்தர்களுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் இப் புதிய சொற்கள் புதியனவல்ல. ஹிட்லர் முதல் சுஹார்த்தோவரை, மக்கார்த்தி முதல் பிலிப்பைன்ஸ், மார்க்கோஸ் வரை ஜனநாயக விரோதிகள் அனைவரும் இவ்வாறுதான் கூறுவது வழக்கம். இதன் அர்த்தம் என்ன?

பூர்ஷுவா வர்க்கம் தனக்குப் பிடித்தமானபோது, ''ஜனநாயகம்'' என்றும், ''வாக்குரிமை'' என்றும், ''பாராளுமன்றம்'' என்றும் பிரமாதப் படுத்தும். அவற்றை மக்கள் நம்பி அவற்றுள் சிக்கியிருக்கும் வரை அவற்றை பூர்ஷுவாக்கள் சிலாகித்துப்பேசிப் பெரிது படுத்துவர்; அவற்றின் கோரத்தனத்தை மக்கள் உணர்ந்து எதிர்க்க ஆரம்பித்ததும் ''ஜனநாயகத்துக்கு ஆபத்து'' என்று பூர்ஷுவா சர்வாதிகாரத்தை நேரடியாக - வெளிப்படையாகவே - நிறுவ முற்படுவர். ஜெர்மன் மக்கள் நாஜிகளை ஜெர்மன் பாராளுமன்றத்துக்கு மிகக் குறைந்த அளவு தேர்ந்தெடுத்த போது, ஆளும் வர்க்கம் இராணுவத்தின் உதவியுடன் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பாசிஸ்டு ஆட்சியை ஏற்படுத்தியது.

அதுபோலவே, சென்ற பொதுத் தேர்தலில் மக்களது சிந்தனை எவ்வாறு போகிறது என்பதனைக் கண்ட ரஸாக் கும்பல் தாம் விற்றுப்பிழைத்து வந்த ''ஜனநாயகம்'' இனியும் அவியாது என்றுணர்ந்ததும், வெட்கமின்றி சர்வாதிகாரத்துக்கு விளம்பரம் செய்கிறது. அதன் முதற்படியே ''புதிய ஜனநாயகம்'' பற்றிய பேச்சாகும். அதாவது, ரஸாக் கூறுவதுபோல சிற்சில சுதந்திரங்கள் இல்லாத ''ஜனநாயகம்'' ஆகும். ஜனநாயகத்தில் பலரகங்கள் இருப்பதுபோல பூர்ஷுவாக்கள் பாசாங்கு பண்ணினாலும் (இந் நாட்டு என். எம். பெரேரா போன்றவர்கள் அத்தகைய ஜனநாயகங்களில் நிபுணர்களாக கூறிக் கொண்டாலும்) உலகிலே உண்மையில் இரு ஜனநாயகங்களே இருக்கின்றன. ஒன்று, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடக்கும் மக்கள் ஜனநாயகம் மற்றது, பூர்ஷுவா ஜனநாயகம். இவைக்குக் கருவியாக முறையே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், பூர்ஷுவா சர்வாதிகாரமும் உள்ளன. இரண்டில் ஒன்றுதான் இயங்க முடியும். இதன்படி பார்த்தால் மலாயாவில் ரஸாக் கும்பல் நிலைநாட்ட முற்படுவது (இப்பொழுது இருப்பதிலும் தீவிரமான முறையில்) பூர்ஷுவா சர்வாதிகாரத்தையேயாகும்.

2. இதற்கு எடுத்துக் காட்டாகச் சமீபத்தில் நடைபெற்றுவரும் சில முக்கியமான சம்பவங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக, நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் சில அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டுக்கு ''விரோதமான'' சக்திகள் என்ற சாட்டில் அடக்கப்படும் இச் சக்திகள் மக்கள் தொடர்புஉடையவை. இரண்டாவதாக, தொழிற் சங்கத்துறையில் மோசமான தாக்குதலும், களையெடுப்பும் நடைபெற்று வருகிறது. தொழிற் சங்கங்களில் கம்யூனிஸ்டுகள் ஊடுருவி விட்டனர் என்ற போலிச் சாட்டில் அவை பலத்த தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன. முன்றாவதாக, பல நூற்றுக் கணக்கான மக்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு வருகிறது. நாடு ''சுதந்திரம்'' பெற்ற சமயம் பிரஜைகளாகத் தகுதிபெற்றோரது உரிமைகளே இவ்வாறு திடீரெனப் பறிக்கப்படுகின்றன. இது குறிப்பாகச் சீன மக்களைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. இவைபோன்ற கெடுபிடி நிகழ்ச்சிகள் யாவும் ஆளும் கும்பலுக்கு கிலிபிடித்துள்ளது என்பதைக் காட்டுகின்றன.

எதிர்க் கட்சிகளை சிறையில் தள்ளியும், மக்கள் தொடர்புடைய தொழிற்சங்க ஊழியர்களை வாய்மூடப் பண்ணியும் ஆட்சி நடத்துவது பாராளுமன்ற ஜனநாயகத்துக்குப் புதிது அல்ல. தற்சமயம் கென்யாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பொம்மையான கும்பல், பெயரளவில் இருந்த ஒரேயொரு எதிர்க் கட்சியைக் கலைத்துவிட்டு, ''பொதுத் தேர்தல்'' நடத்த முன்வந்திருப்பது போலவே, எதிர்க்கட்சிகளை மடக்கிவிட்டு ''ஜனநாயகம்'' பேசுகிறான் ரஸாக்.

3. ஆனால், உண்மையில் இவையெல்லாம் வெளித் தோற்றங்களே. சமீப காலத்தில் மக்களிடையே ஏற்பட்டு வரும் விழிப்பும், ஏகாதிபத்திய எதிர்ப்பும், தேசபக்தர்களின் ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஏற்பட்டுள்ள வேகமுமே ஆளும் கும்பலை உலுக்கியிருக்கிறது. ரஸாக் தலைமையில் இயங்கும் ''பாதுகாப்பு தலைமை நிலையம்'' என்னதான் முயன்றபோதும், நாட்டின் பலபகுதிகளில் துணிகரமான முறையில் விடுதலை முன்னணிப் படைகள் தாக்குதல்கள் நடத்தியிருக்கின்றன. சில நகரங்களில் ஒருவகையான ஊரடங்கும் சட்டம் அமுலில் இருக்கிறது. தாய்லாந்து - மலாயா எல்லைப் புறத்தில் இருப்பதாகக் கூறப்படும் தேசபக்தப் படைகள் இப்பொது பல பகுதிகளில் மக்கள் மத்தியில் நடமாடுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. செய்தித் தணிக்கையையும் தாண்டி, இப் புதினங்கள் மெல்ல மெல்ல வெளிவருகின்றன. சமீபத்தில், தாய்லாந்து-மலாயா எல்லைக் கூடாகச் செல்லும் பிரதான நெடுந்தெருவை விடுதலை இயக்கப் படையினர் வெடிமருந்து கொண்டு தகர்த்ததையும், ஸ்தலத்திற்கு முட்டாள் தனமாக ஹெலிகொப்டர்களில் சென்றிறங்கிய பாதுகாப்புப் படைகள் துவம்சம் செய்யப் பட்டதையும் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் ஆழ்ந்த கவலையுடன் வெளியிட்டன.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, பாராளுமன்ற மாயையைக் கிழித்தெறிந்து கொண்டு மலாயா மக்கள் புரட்சிகர நடவடிக்கையின் பக்கம் திரும்புவது தெளிவாகிறது. இதனைக் கண்ட ஏகாதிபத்திய அடிவருடிக் கும்பல் திகிலடைந்து பதட்டத்துடன் பல ''அவசர'' நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. ஆனால், மக்கள் சக்தி என்ற பெரும் புயல் இறுதியில் இவையாவற்றையும் அடித்துக் கொண்டு போகும் என்பது உறுதி.

## பாலஸ்தீனிய மக்களின் ஆயுதப் போராட்டம் சகல துரோகிகளையும் அம்பலப் படுத்துகிறது

## அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு அதிர்ச்சி

சரியான சிந்தனைகள் மக்கள்மனங்களைக் கவர்ந்து பற்றிக்கொண்டால் பின்னர் அவையே பௌதிக பலமாகி பெருஞ் சாதனைகளுக்கு வழி காட்டும் என்று, ஸ்டாலின் முதல் மாசேதுங் வரை புரட்சி மேதைகள் கூறிவந்துள்ளனர். விஞ்ஞானக் கருவிகளையும், பெரும் போர்க் கருவிகளையும் அவற்றின் அடியாக தோன்றும் ''பேச்சு வார்த்தைகளையும்'' நம்பி வழிபட்டுக் காலங்கழிக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கும், ரஷ்ய சமூக ஏகாதிபத்திய வாதிகளுக்கும் தலையடி கொடுப்பது போல வளர்ந்து வருகிறது பாலஸ்தீனிய விடுதலை இயக்கம்.

மேற்கு நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் பிரசித்தப் படுத்திய ''ஆறுநாள்'' போருக்குப் பின் அராபிய அரசியல் தலைவர்கள் (மக்கள் அல்ல) மனமுடைந்து வல்லரசுகளின் நல்லெண்ணத்தை நாடியிருந்த வேளையில் சிறு பொறியாகத் தெறித்த 'பெடயீன்'' இயக்கம் இன்று அராபிய உலகத்தையே இணைக்கும் ஆத்மீக சக்தியாகவும், அதிசூரத்தனம் காட்டிய இஸ்ரேலியர்கள் அஞ்சும் ஒரேயொரு சக்தியாகவும் வளர்ந்து விடடது. பாலஸ்தீனிய விடுதலை முன்னணி ஒரு கட்சியல்ல; வெறும் நிறுவனமுமல்ல; அது அராபிய மக்களது எழுச்சி; இயக்கம்; எதிர்கால இலட்சியம்.

பழைய காலத்திலே காவியங்களில் கதாநாயகர்களைக் குறிப்பிடுமிடத்து, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார்கள் என்று வருணிப்பார்கள். அது போல், பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும் ஒவ்வொரு நாளும் தியாகத்தீயில் புடம்போடப் பட்டு எடுக்கப் பெற்று உறுதிப்பாடும் உரமும் அமையப் பெற்று வருகிறது.

அது காரணமாகவே அதனை திரிபுவாதிகள் திசைதிருப்பவும் திருகிக்கொல்லவும் முயன்று வந்துள்ளனர். ரஷ்ய யுத்த தளபாடங்களை நம்பியிருக்கும் எகிப்து போன்ற நாடுகளில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, பாலஸ்தீனிய முன்னணியைப் பலவீனப்படுத்த சமூக ஏகாதிபத்திய வாதிகள் எடுத்த முயற்சிகள் எத்தனையோ. தாம் எகிப்து, சிரியா, அல்ஜீரியா முதலிய தேசங்களுக்கு விற்கும் தளபாடங்கள் கொரில்லாப் படையினருக்குக் கிடைக்கக் கூடாது என்று இரகசிய நிபந்தனைகள் விதித்தனர். ரஷ்யர்கள், சுருங்கச் சொன்னால், கொரில்லாக்களின் ஆயுதங்களை மழுங்க வைக்க அவர்கள் எவ்வளவோ முயன்றனர். ஆனால், இவையெல்லாவற்றையும் முறியடித்துக்கொண்டு கொரில்லாக்கள் தமது வீரசாகசத்தாலும், தியாகவேள்வியாலும் புதியதொரு வரலாற்றையே பொறித்து வருகின்றனர்.

ஆயினும், மடையரும் மமதை கொண்டோரும் தாம் பிடித்ததை விடுவதில்லை. தமது துரோக முயற்சிகள் தோல்வியடைந்ததைக் கண்ட ரஷ்யர்கள் இப்பொழுது வேறொரு தந்திரோபாயத்தைக் கடைபிடிக்கத் தொடங்கியுள்ளனராம்.

7-ம் பக்கம் பார்க்க

# அல்பேனியா நல்லதோர் உதாரணமாகும்

அல்பேனியப் புரட்சியிலிருந்து பல அடிப்படையான முக்கியமான பாடங்களை இலங்கை மக்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென தோழர் என். சண்முகதாசன் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். அல்பேனியப் புரட்சியினதும் விடுதலையினதும் 25வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடு முகமாக இலங்கை அல்பேனிய நட்புறவுச் சங்கத்தினுல் இக் கூட்டம் நடாத்தப்பட்டது.

நட்புறவுச் சங்கத்தின் தலைவரான தோழர் எஸ், டி. பண்டாரநாயக்கா இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

அல்பேனிய மக்கள், தோழர் அன்வர் ஹோஷாவினுல் வழிகாட்டப்பட்ட அல்பேனிய தொழிலாளர் கட்சியின் தலைமையின் கீழ் பாஸிஸ ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக வீரஞ்செறிந்த போராட்டத்தை நடாத்தி 1944, நவம்பரில் தமது நாட்டை விடுதலையாக்கி மக்கள் ஆட்சியைத் தம் நாட்டில் ஏற்படுத்திஞர்கள் என்றும் மேலும் அவர் கூறிஞர்.

தொடர்ந்து பேசுகையில், போராட்டத்தை ஆரம்பித்த போது அல்பேனிய மக்களிடம் துப்பாக்கிகள் இருக்கவில்லை. அவர்கள் எதிரிகளிடமிருந்து துப்பாக்கிகளைப் பறித்தெடுத்து அவற்றின் துணைகொண்டு தமது நாட்டை விடுதலையாக்கியதோடல்லாமல் யூகோஸ்லாவியாவின் ஒரு பகுதியையும் விடுதலை செய்தனர் என்று கூறிஞர்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு வாக்குப் பெட்டி ஒருபோதுமே வழிவகுக்காதென்றும் புரட்சியே ஒரேயொரு சரியான வழியென்றும் இவ் விஷயத்திலும் அல்பேனியா எமக்கு சிறந்த உதாரணமாக உள்ளதென்றும் அவர் கூறிஞர்.

கோட்டை பாராளுமன்ற அங்கத்தவரான திரு. ஸ்டான்லி திலகரத்ன பேசும்போது, இந்நாட்டு மக்களின் இன்னல்களுக்கு விமோசனமளிக்க பாராளுமன்ற முறை தவறிவிட்டதென்றும், பாராளுமன்றமுறை வெறும் பத்தாம் பசலியானதென்பதையும் பாராளுமன்றம் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு அளிக்கமாட்டாதென்பதையும் இப்போது சாதாரண மக்கள் உணர்ந்துவிட்டார்களென்றும் அவர் கூறிஞர்.

நாம் வெவ்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும் சின்னஞ்சிறு நாடாகிய அல்பேனியா பல தடைகளையும் பிரச்சினைகளையும் தாண்டி இன்று செழிப்புற்று வாழ முடியுமேயாஞல் இலங்கையும் சோஷலிஸ அரசாங்க அமைப்பின்கீழ் ஒரு ஸ்திரமான பொருளாதாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதில், ஒற்றுமைப்பட்டுள்ளோமென்று அவர் மேலும் கூறிஞர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் திரு. கே. எல். வி அழகியவண்ணவும் இலங்கை சீன நட்புறவுச் சங்கத்தின் தலைவரான திரு. எஸ். டபிள்யூ. வல்பிட்டவும் கூட்டத்தில் பேசிஞர்கள்.

கூட்ட முடிவில், 'நிஜபிமே கினிதல்'' என்ற நாட்டிய நாடகமும் நடைபெற்றது.

## தலைவர் மாஓவின் மேற்கோள்

''தூரத்திலிருக்கும் ஒரு ஆத்ம நண்பன் ஒரு தூரதேசத்தை கிட்டகொண்டுவருகின்ருன்'' சீனுவும், அல்பேனியாவும் ஆயிரக்கணக்கான மலைகளாலும் நதிகளாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆஞல் எமது இதயங்கள் நெருங்கிய தொடர்புடையவைகளாக இருக்கின்றன. நாம் உங்களது உண்மையான நண்பர்களாகவும் தோழர்களாகவுமிருக்கின்ருேம். நீங்கள் எங்களுடையவர்கள். ''தமது உதடுகளில் தேனும், தமது இதயங்களில் கொலையும்'' வைத்திருக்கும் அந்த இரட்டை வேட போலி நண்பர்களைப் போல அல்ல. எமது போராட்ட உணர்வுள்ள புரட்சிகர நட்பு மூர்க்கத் தனமான புயல்களின் பரிசோதனைகளுக்கு நின்று பிடித்திருக்கிறது.

அல்பேனிய தொழிற் கட்சியின் ஐந்தாவது காங்கிரஸிற்கு வாழ்த்துச் செய்தி. (25, அக்டோபர் 1966)

# அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு அதிர்ச்சி

## உலக வலம்........

◎ 6-ம் பக்கத் தொடர்

அராபிய விவகாரங்களில் கைதேர்ந்த ரஷ்யர்கள் இப்பொழுது தாமும் கொரில்லாக்களை ஆதரிப்பதுபோல நடித்து, அதி தீவிரமான சுலோகங்களை முன்வைக்கும்படி சில பகுதியினரைத் தூண்டி முன்னணியில் பிளவை உண்டாக்க முயல்கின்றனர் என்றும், அம் முயற்சியில் அவர்கள் வெற்றியடைந்தால் கொரில்லாக்களின் தாக்குதல்கள் வேகங் குறையுமென்று சந்தோஷத்துடன் சில மேல் நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் எழுதியுள்ளனர். கீழைத் தேசங்களில் புரட்சி வெடித்து, ஏகாதிபத்தியத்துக்கு இறுதிச் சடங்குகள் நடத்திவைக்க வேண்டுமென்று அல்லும் பகலும் அயராது உழைத்த லெனின் பிறந்த நாட்டில் இன்று வாழும் துரோகக் கும்பல், தீயணைக்கும் படையினர் வேலையைச் செய்யப் படாத பாடு படுவதைப் பார்க்கும்போது, எதிர்ப் புரட்சிப் பணியில் ரஷ்யர்கள் அமெரிக்கரையும் மிஞ்சிவிடுவார்கள் போலிருக்கிறது.

ஆஞல், அரபு உலகில் சகலவிதமான பிற்போக்குவாதிகளின் முகமூடி கிழிந்து வருகிறது. கொரில்லாக்களின் வீரச் செயல்கள் விரைவில் வியட்நாம் வரலாற்றை நிகர்க்கும் வகையில் உலகத்தின் கவனத்தை ஈர்க்கப் போகிறது. சென்றவாரம் கொரில்லாக்கள் நீண்ட தூரம் கடலில் மூழ்கிச் சென்று இஸ்ரேலிய துறைமுகம் ஒன்றில் நங்கூரமிட்டு நின்ற இரு கப்பல்களை நாசமாக்கியுள்ளனர். இது குறிப்பிடத்தக்க அரும் சாதனையாகும். இரண்டாவது உலகப் போரின்போது, இத்தகைய ''யுத்தம்'' புரிவதற்கென்றே திறமைமிக்கவர்களைக் கொண்ட தனிப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டன. இத் துறையில் ஈடுபடுபவர்களை ''தவளை மனிதர்'' என்று அழைப்பர். மேல் நாட்டவருக்கே கௌரவம் பெற்றதாகக் கருதப்பட்டு வந்த இப் போர் முறையை இப்பொழுது அரபு கொரில்லாக்கள் அனாயாசமாகச் சாதித்திருக்கின்றனர்.

இதுபோன்ற அனுபவங்களை வியட்நாமில், தேசிய விடுதலை முன்னணியினர் போரில் பெற்றனர். அடிக்கு அடி; உதைக்கு உதை; யுந்த தந்திரத்துக்குப் பதில் தந்திரம். இதுகாலவரை உலக பூர்ஷுவா பத்திரிகையாளர்கள், இஸ்ரேலியர்களின் அதிவிசேஷமான படைப் பயிற்சிகளைப் பற்றியும், மின்னல் வேகத்தில், எதிர்பாராத விதத்தில் எதிரியைத் தாக்கிச் சுக்கு நூருக்கும் நுட்பங்களைப் பற்றியும் பக்கம்பக்கமாக எழுதி வந்தனர். இஸ்ரேலிய யுத்த மந்திரியும், படைத் தளபதியுமான டயான் உலகங் கண்ட சிறந்த தளபதிகளில் ஒருவர் என்று புராண வரலாறு படைத்து வந்தனர்.

அதே பத்திரிகையாளர்கள் இப்பொழுது பச்சைப் பாலகர்களும், இளம் பெண்களும், பிறரும் அரபு கொரில்லாத் தரப்பில் நிகழ்த்திவரும் வியத்தகு வீரத்தை வேண்டா வெறுப்பாக வேனும் எழுத வேண்டியிருக்கிறது. கொரில்லாப் பயிற்சியின் பயஞக ஒரு டயான் அல்ல ஓராயிரம் அரபு டயான்கள் உருவாகுவர் என்பது உறுதி.

◎

### அதிர்ச்சி

சமீபத்தில் அமெரிக்கா முழுவதும் பிரமாண்டமான வியட்நாம் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றன வல்லவா? அதை நிக்ஸன் இயன்றளவு குறைவாகவே மதிப்பதுபோல நடித்தான். ஆஞல், அமெரிக்காவுக்கு வெளியே - கடல்கடந்த நாடுகளில் கடமையாற்றும் அமெரிக்க ''சமாதானப் படையினர்'' சிலரும் தாம் பணிபுரியும் நாடுகளில் நடைபெற்ற யுத்த எதிர்ப்பு ஊர்வலங்களில் கலந்துகொண்டது கேட்டு ஆட்சிபீடம் அசந்து போனதாம்.

முதலாவது கென்னடி காலத்தில் ஆளும் வர்க்கத்தின் முழு ஆசிர்வாதத்துடனும் ஆரம்பிக்கப்பட்ட இச் சமாதானப் படையால் பொறுக்கி எடுக்கப்பட்ட நம்பிக்கையான நபர்களே சேர்க்கப்பட்டனர். இவர்கள் வர்க்க அடிப்படையிலும் அங்கீகரிக்கப்பட்டவர்கள். சகலவிதமான நாசகார வேலைகளையும் நோகாமல், சிரித்த முகத்துடன் செய்ய வல்ல இத் தொண்டர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைசிறந்த ஏஜண்டுகளாகவும், பிரசாரர்களாகவும் கருதப்பட்டனர். அமெரிக்க காங்கிரஸ் இப் படைக்குப் பெரும் பணம் ஒதுக்கி வந்துள்ளது.

அத்தகைய நம்பகமான தொண்டர்கள் அமெரிக்காவிற்கு எதிரான ஊர்வலங்களில் கலந்துகொண்டதை ஆளும் பீடத்தால் நம்பவே முடியவில்லையாம். செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தனராம்.

அதற்கென்ன செய்வது? இதைவிடப் பெரிய பேரதிர்ச்சிகள் இன்னும் எத்தனையோ வர இருக்கின்றன!

## தொழிற் சங்க செய்திகள்:

### அக்மி அலுமினியம் கம்பெனி தொழிலாளர் வேலைநிறுத்தம்

அக்மி அலுமினியம் கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடந்த 27ந் திகதி தொடக்கம் போனஸ் பிரச்சினை மீது நடாத்திய வேலைநிறுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தியுள்ளார்கள். போனஸ் தொகையை நிர்ணயிக்கும் பிரச்சினையை மத்தியஸ்தத்திற்கு விடுதலை நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டதிஞலேயே வேலைநிறுத்தம் நிறுத்தப்பட்டது.

★

### இந்தோ-சிலோன் தோலுற்பத்தி தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

இந்தோ-சிலோன் தோல் உற்பத்தித் தொழிற் சாலையில் நடைபெற்று வந்த வேலை நிறுத்தமும் தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது. நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது.

அக்மி அலுமினியம் கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்திலும் இந்தோ-சிலோன் தோல் உற்பத்தித் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் இலங்கை பொது, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்திலும் அங்கம் வகிக்கின்றூர்கள்.

# மாணவர்-தொழிலாளர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சனைகளையும் அவர்கள்மீது இன்றைய பிற்போக்கு அரசாங்கம் நடாத்தும் தாக்குதல்களையும் பரந்துபட்ட வெகு ஜனங்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தோடு சென்ற மாதம் 30ந் திகதி பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை இலங்கைத் தொழிலாள வர்க்கத்துடன் ஒன்றுசேர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்தினர்கள்.

வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்திலிருந்து 1.30 க்குப் புறப்பட்ட ஊர்வலம் பெலியகொடை நகர மண்டபத்தை வந்தடைந்த பின்னர் பிரமாண்டமானதோர் கூட்டம் அங்கு நடைபெற்றது.

இலங்கையிலுள்ள பல்வேறு தொழிற்சங்கங்களை ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டுமே ஊர்வலத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். வழிநெடுக தொழிலாளர்களும் மாணவர்களும் புரட்சிகரக் கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் சார்பில் இக் கூட்டத்தில் பேசிய தோழர் எஸ், டி. பண்டாரநாயக்கா ''இன்றைய பங்கலோட்டுத்தனமான பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் எந்த விதமான கூட்டணிகள் ஆட்சி பீடத்தில் ஏறினுலும் மாணவர்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது'' எனக் குறிப்பிட்டார். தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், புரட்சிகர புத்திஜீவிகள் ஆகியோரைக் கொண்ட புரட்சிகர ஐக்கிய முன்னணியொன்றைக் கட்டியெழுப்பி ஏகாதிபத்திய சார்பு, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சகல பிற்போக்கு சக்திகளை பலாத்காரமாகத் தூக்கியெறிவதன் மூலமே மாணவர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியுமென பலத்த கரகோஷத்திற்கிடையே அவர் கூறினர்.

இக் கூட்டத்தில் பேசிய திரிபுவாத, சமசமாஜ தொழிற் சங்கத் தலைவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலைப் பற்றியே தமது பேச்சுக்களில் குறிப்பிட்டனர். மாணவ தலைவர்கள், பாராளுமன்ற ஆட்சி முறை பலாத்காரமாக முறியடிக்கப் பட்டாலே மாணவர்களுக்கு விமோசனம் ஏற்படும் என்று கூறினர்கள்.

## மாணவர் வேலைநிறுத்தம்

கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். நிர்வாகிகள் காலவரையின்றிப் பல்கலைக் கழகத்தை மூடியுள்ளார்கள். வேலைநிறுத்தம் பரிபூரணமான வெற்றியை ஈட்டியுள்ளது.

வித்தியாலங்காரப் பல்கலைக் கழக மாணவர்கள் எந்நேரத்திலும் இறங்கலாமென எதிர்பார்க்கப் படுகின்றது.

# யாழ். அல்பேனிய தினக் கூட்டம்

"தோழர் அன்வர் ஹோஷாவின் தலைமையிலுள்ள அல்பேனிய தொழிலாளர் கட்சியும் அது தலைமைதாங்கும் மக்கள் விடுதலைச் சேனையும் துப்பாக்கிஏந்தி பாஸிச ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்து ஏகாதிபத்தியவாதிகளின் சதிகளை நிர்மூலமாக்கி தமது நாட்டை விடுதலை செய்தனர். இன்று அவர்கள் 'ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் பிக்கானும் ஏந்தி' சோஷலிஸ நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ளனர். தோழர் அன்வர் காட்டிய பாதை நமது நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் உலகெங்கணுமுள்ள அடக்கியொடுக்கப் படும் மக்களுக்கும் சரியான பாதையாகும்'' என தோழர் என். சண்முகதாசன் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் டிசம்பர் 1ந் திகதி நடைபெற்ற அல்பேனிய தினக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

இலங்கை-அல்பேனிய நட்புறவுச் சங்கத்தின் யாழ். பிரதேசக் கமிட்டியினல் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்திற்கு தோழர் நா. முத்தையா தலைமைதாங்கினர். பல கிராமங்களிலிருந்தும் நூற்றுக் கணக்கானோர் வந்திருந்தார்கள். கூட்ட ஆரம்பத்தில் இலங்கை-அல்பேனிய நட்புறவுக் கீதம் இரு சிறுமிகளால் இசைக்கப்பட்டது. இலங்கை-அல்பேனிய நட்புறவை வலியுறுத்தும் தோழர் மாஓவையும் அன்வரையும் வாழ்த்தும் இப் பாடல்களை கூட்டத்தினர் மெய்மறந்து கேட்டார்கள்,

தோழர் சண்முகதாசன் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: அல்பேனியா ஐரோப்பாவில் மார்க்சிஸ-லெனினிஸக் கோட்டையாக விளங்குகின்றது. அல்பேனிய ஏகாதிபத்தியம் நவீன திரிபுவாதம், பிற்போக்குவாதிகள் ஆகிய சகல விதமான எதிரிகளினுலும் சூழப்பட்டுள்ள போதிலும் புனிதமான மார்க்சிஸ-லெனினிஸ செம்பதாகையை அவர்கள் வெற்றிகரமாக உயர்த்திப் பிடித்துள்ளார்கள். இதனுல் இவர்கள் சகல மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகளின் மதிப்பையும் பெற்றுள்ளார்கள்.

தோழர்கள் எம். எஸ். இக்பால், கே. செந்திவேல் மற்றும் பலர் கூட்டத்தில் பேசினர்கள்.

## நம்மைச் சுற்றி ......

◎ 2-ம் பக்கத் தொடர்

அணிதிரட்ட வேண்டுமென்ற மார்க்சிஸ கோட்பாட்டைக் காற்றில் பறக்கவிட்டு படுமோசமான வகுப்புவாதச் சேற்றில் மூழ்கியதன் விளைவுதான் தமிழ் மக்கள் பீட்டரைக் கைவிட்டதற்குக் காரணம். வர்க்கங்கள் போராடுகின்றன. வர்க்க அடிப்படையில்தான் தமிழ் மக்கள் பிளவுபட்டுள்ளனர். துரோகிகளை துடைத்தெறிந்துவிட்டு முற்போக்கு சக்திகள் முன்னேறுகின்றன.

★

## கட்டுக்காசைக் காப்பாற்ற மாஸ்கோ பயணம் லஞ்சம்

தேர்தல்கள் நடைபெறும் போது தேர்தல் வேடிக்கைகளுக்குக் குறைவேயில்லை. கொழும்பு மாநகரசபை தேர்தலில் சூடுபிடித்துள்ளது, பல சுவையான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றில் ஒன்று இரண்டைத் தெரிந்து தருகிறோம்.

இந்த நகரசபைத் தேர்தலில் புறக்கோட்டை பகுதியிலுள்ள தொகுதியொன்றில் போட்டியிடும் கெனமன் திரிபுவாதிகளின் அபேட்சகர் — இவர் தொழிற் சங்க தலைவரும்கூட - தனது தொகுதியில் தேர்தல் வேலை செய்வதற்கு ஆள் பிடிக்கும் புதிய தந்திரத்தைக் கையாள்கின்றார்.

இவர்; இஸ்லாமிய சோஷலிஸ்ட் முன்னணியின் ஆதரவோடு முஸ்லிம் வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, அத் தொகுதியிலுள்ள இ. சோ. மு. பிரமுகரைச் சந்தித்து, தன்க்கு தேர்தலில் உதவினல் அவருக்கு இலவச சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளார். அந்த இ. சோ. மு. பிரமுகர் தனக்கு மாஸ்கோ சுற்றுலா லஞ்சம் கொடுக்க வந்த அபேட்சகரை நோக்கி எனக்கு மட்டும் எதற்கு, இத் தொகுதி மக்கள் அனைவருக்கும் இலவச மாஸ்கோ சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்து தருவதாக நோட்டீஸ் அடியுங்கள். நிச்சயமாக நீங்கள் கட்டுக்காசை இழக்க மாட்டீர்கள் எனபுத்திக் கூறினராம்.

★

## தேநீர் வாங்க உதவிய சோவியத் புத்தகங்கள்

இந்த மூக்குடைபட்ட அபேட்சகரின் தேர்தல் ஏஜண்ட் அத் தொகுதியிலுள்ள மற்றெரு இ. சோ. மு. பிரமுகரைச் சந்தித்து ஆதரவு கேட்டாராம். சோவியத் ரஷ்யா அராபிய மக்களுக்கு உதவுகிறது நீங்கள் முஸ்லிம்கள் எங்களுக்கு உதவுங்கள் எனகேட்டுள்ளார். அதற்கு அந்த இ. சோ. மு. பிரமுகர், சோவியத் ரஷ்யாதானே அராபிய மக்களைக் இஸ்ரேலுக்குக் காட்டிக் கொடுக்கிறது என கூறினராம். உடனே, திரிபுவாதியின் தேர்தல் ஏஜண்ட் தன்னேடு வந்தவரின் காதில் குசுகுசுத்தாராம். அவர் உடனே போய் சோவியத் ரஷ்யா வெளியிட்டுள்ள பெரிய புத்தகக் கட்டையும், பத்திரிகைகளையும் கொண்டுவந்திருக்கிறர்.

இதோ புத்தகங்கள் இதைப் படித்துப் பாருங்கள். என கூறி புத்தகங்களையும், அந்த பிரமுகரிடம் கொடுத்துள்ளார்.

அந்த பிரமுகர் தனது நண்பனை அழைத்து கொடுத்த புத்தகக்கட்டை கடையில் விற்றுவிட்டு அந்த பணத்திற்கு தேநீர் வாங்கி வர அனுப்பினராம்.

இதைப் பார்த்த திரிபுவாதி என்ன செய்கிறீர்கள் என கேட்ட போது, உங்களுக்கு தேநீர் வாங்க புத்தகக்கட்டை விற்க சொன்னேன் என்று கூறினராம் பிரமுகர்.

தேநீருடன் வந்தவர், புத்தகக்கட்டு ஆறு ருத்தல் இருந்தது. இந்தாங்க தேநீர் வாங்கியது போக மிச்சம் என திரிபுவாதியின் கையில் கொடுத்து அனுப்பினராம்.

## சீன அல்பேனிய.....

◎ 5-ம் பக்கத்தொடர்

எமது இரு மக்களும் எல்லா நேரத்திலும் ஐக்கியப்படுத்தப் பட்டவர்களாக இருந்து பக்கம் பக்கமாக இருந்து போராடுவார்கள்.

எமது சிறந்த முதல்வர் தலைவர் மாஓ கூறியுள்ளார்;''சீன, அல்பேனிய மக்களிடையிலுள்ள புரட்சிகர நட்புறவு மூர்க்கத்தனமான சர்வதேசிய வர்க்கப் போராட்டங்களின் பரிசோதனைகளுக்கு நின்றுபிடித்துள்ளது. இந்த நட்புறவினுல் பிறப்பிக்கப்பட்ட சக்தி, வற்றுததாக இருக்கின்றதுடன் உண்மையில் வெல்லற்கரியது''.

சீன, அல்பேனிய மக்களிடையேயுள்ள நட்புறவைப் பற்றிப் பேசுகையில் அல்பேனிய மக்களின் மகத்தான தலைவர் தோழர் அன்வர் ஹோஷா சுட்டிக்காட்டினர்; ''நாம் பிரிக்கமுடியாத சகோதரர்கள், போராடத் தோழர்கள்.''

தற்பொழுது, உலகத்து மக்களின் புரட்சிகரப் போராட்டம் பேரெழுச்சி பெற்று வலிமையுடன் முன்சென்றுகொண்டிருக்கிறது, சூழ்நிலை மிகச் சிறப்பாக இருக்கின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியமும் சோவியத் திரிபுவாத சமூக ஏகாதிபத்தியமும்மலைபோன்ற நெருக்கடிக்குள் மாட்டுப்பட்டு தப்பிச் செல்லமுடியாத ஒரு இக்கட்டான நிலையிலிருக்கின்றன. ஒத்துழைத்துழைத்துக் கொண்டிருக்கும் அதே வேளை, ஒன்றுடன் மற்றது மோதிக் கொண்டிருக்கும் அவைகள் இரண்டும் தமது சொந்தப் பேராசைகளைப் பெறும் ஒரு முயற்சியில் தனது ராணுவ விஸ்தரிப்பைத் தீவிரப்படுத்திகொண்டு யுத்தத் தயாரிப்புக்களைக் செய்கிறன. அவைகள் குள்ளத்தனமாக எதிர்ப் புரட்சி இரட்டை வேடத் தந்திரோபாயங்களை செய்கின்றன: ஒரு புறத்தில் பெருமளவு மற்றவர்களை ஏமாற்றுவதற்கு சமாதான பஜனையை உரக்க உச்சாடனம் செய்யும் அதேவேளையில், மறுபுறத்தில் தமது சூறையாடலையும் ஆக்கிரமிப்பையும் அவைகள் வெறித்தனமாகத் தீவிரப்படுத்துகின்றன. அவர்களின் இந்த எதிர்ப் புரட்சி இரட்டை வேடத் தந்திரோபாயங்களுக்கு எதிராக முழு உலகத்து மக்களும் அதிக விழிப்புடனிருக்க வேண்டும், ஏகாதிபத்தியமும் சமூக ஏகாதிமத்தியமும் முழு உலகத்து மக்கள் மீது ஒரு யுத்தத்தைத்திணிக்க துணிந்தால், ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஒழிப்பதற்கு புரட்சிகர யுத்தத்தை உலகத்து மக்கள் உறுதியுடன் உபயோகித்து குறிப்பிடப்பட்ட காலத்திற்கு முன்பே ஏகாதிபத்தியத்தினதும் சமூக ஏகாதிபத்தியத்தினதும் சவக்குளிக்குள் அவைகளை அனுப்ப வேண்டும்.

ஏகாதிபத்தியத்தையும் நவீன திரிபுவாதத்தையும், சகல பிற்போக்கையும் தூக்கி எறிவதற்கான போராட்டத்திலும், ஏகாதிபத்தியம் இல்லாத, முதலாளித்துவமில்லாத சுரண்டும் அமைப்புமுறையில்லாத ஒரு புதிய உலகைக் கட்டி எழுப்புவதற்கான போராட்டத்திலும், அல்பேனிய மக்களுடனும் உலகம் முழுவதுமுள்ள மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகளுடனும் உலகத்து புரட்சிகர மக்களுடனும் சீன மக்கள் உறுதியாக ஐக்கியப்பட்டுக் கொண்டிருக்கின்றர்கள்.

## விமர்சனம்

இலங்கை சாகித்திய மண்டலத்தில் பரிசு பெற்ற தமிழ் நூல்கள் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

பிரசுரத்திற்குத் தகுதியான கட்டுரைகளை 'தொழிலாளி' ஆசிரியர் குழு தீர்மானிக்கும்.

– ஆசிரியர்



கொழும்பில் நடைபெற்ற அல்பேனிய தினக் கூட்டத்தில் பாராளுமன்ற அங்கத்வர் ஸ்டான்லி திலகரத்தின பேசிக்கொண்டிருக்கின்றர். மேடையில் தோழர்கள் சண்முகதாசன் எஸ். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2